
பக்கங்கள் 15+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 28 ஞாயிற்றுக்கிழமை 11.05.2025 | அதிர்வு 281

## இறம்பொடை விபத்து: ஜனாதிபதி இரங்கல்!




நுவரெலியா, கொத்மலை, இறம்பொடை – கெரண்டிஎல்ல பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தின

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




இறம்பொடையில் துயரம்

# கோர விபத்தில் 21 பேர் மரணம்!

## பலர் வைத்தியசாலைகளில் உயிருக்குப் போராட்டம்



(க.கிஷாந்தன், பி.கேதீஸ்)

இலங்கையில் இன்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் 21 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். அத்துடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டம், கொத்மலை பொலிஸ்

02





## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரிவுக்குட்பட்ட இறம்பொடை – கெரண்டி எல்ல பகுதியில் இன்று அதிகாலை 4:30 மணியளவில் இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

கதிர்காமத்தில் இருந்து குருநாகல் நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று, இன்று அதிகாலை 4:30 மணியளவில் நுவரெலியா – கம்பளை பிரதான வீதியில் கொத்மலை, இறம்பொடை – கெரண்டிஎல்ல பகுதியில் சுமார் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்தவர்களில் 21 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

பஸ் சாரதி, சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட 21 பேர் விபத்தில் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த பஸ்ஸில் சுமார் 75 பேர் பயணித்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் கொத்மலை பொது வைத்தியசாலை, நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை, கம்பளை மற்றும் நாவலப்பிட்டி ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், படுகாயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் கொத்மலை பொலிஸார், ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்பக் கோளாறே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர்.

விபத்து குறித்து விசாரணை நடத்துவதற்காகச் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் டாக்டர் பிரசன்ன குமார குணசேன ஆகியோர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து நிலைமையை ஆராய்ந்தனர்.






# தமிழரசு முன்னிலையில் இருக்கும் சபைகளில் அவர்களுக்கு ஆதரவு!

## சித்தார்த்தன் இன்று அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னிலையில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் அவர்கள் ஆட்சி அமைப்பதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆதரவை வழங்கும் என அக்கூட்டணியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளை அமைப்பது தெடர்பில் தமிழரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் இன்று இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடெம் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இச் சந்திப்பு தெடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

வடகிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளே இங்குள்ள ஒவ்வொரு சபைகளிலும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்பதில் எல்லோரும் ஒரே நிலைப்பாட்டோடு இருந்தனர்.

அதிலும் தமிழர் பிரதேசங்களில் தமிழ்க் கட்சியொன்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக இருந்தனர்.

இதற்கமைய தமிழரசுக் கட்சி பல இடங்களிலும் முன்னிலையில் இருந்தாலும் வேறு தமிழக் கட்சிகள் முன்னிலையில் இருந்தாலும் தமிழ்த் தேசிய தரப்பு என்ற அடிப்படையில் இவர்கள் ஆட்சி அமைக்கலாம். அதே போன்று நாங்களும் முன்னிலையில் இருக்கும் இடங்களில் அதே விட்டுக் கொடுப்புடன் நாங்களும் ஆட்சி அமைப்போம்.

ஆக தமிழரசுக் கட்சி தான் வடக்கு கிழக்கில் பல இடங்களிலும் முன்னிலையில் இருப்பதாலும் தமிழ்க் கட்சியொன்று ஆட்சியமைக்க வேண்டும் என்பதாலும் நாங்கள் எங்கள் ஆதரவை வழங்குவோம்.

இதேபோன்றே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஒரு சில இடங்களில் முன்னிலையில் இருப்பதால் அந்த சபைகளில் அவர்களும் ஆட்சி அமைக்கலாம். அவர்களும் எம்முடன் பேசி இருக்கிறார்கள். அவர்களுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இதேவேளை ஜே.வி.பியும் ஒரு சில இடங்களில் ஆட்சி அமைக்க தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் அவர்கள் ஆட்சியை பிடிக்காத வகையில் தமிழர் தரப்பாக நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து தமிழ்க் கட்சிகளே அங்கும் ஆட்சியமைப்பதை உறுதி செய்ய வேண்டும். – என்றார்.

---

### இறம்பொடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவரின் இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :–

“நுவரெலியா – கம்பளை பிரதான வீதியில் கொத்மலை, கெரண்டிஎல்ல பகுதியில் இன்று காலை நடந்த பஸ் விபத்து பற்றிய செய்தியைக் கேட்டு நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

நாட்டில் தினமும் அதிகரித்து வரும் வீதி விபத்துகள் குறித்து அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது. இது போன்ற விபத்துகளைத் தடுப்பதற்கான நிரந்தரத் திட்டத்தை வகுப்பதற்கு அரசு தற்போது மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றது.

தற்போதுள்ள சட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலமும், சாரதிகளின் மனப்பான்மையை மேம்படுத்துவதன் மூலமும் இவ்வாறான விபத்துக்களைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம். இதற்காக “கிளீன் ஸ்ரீலங்கா” திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை நடந்த இந்தக் கொடூரமான வீதி விபத்தில் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கின்றேன்.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க சகல தொடர்புடைய மருத்துவமனைகளையும் தயார்படுத்தவும், இது தொடர்பாக தேவையான அனைத்து எதிர்கால நடவடிக்கைகளையும் எடுக்கவும் பாதுகாப்புப் படையினருக்கும் சுகாதாரத் துறைகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் நினைவூட்ட விரும்புகின்றேன்.” – என்றுள்ளது.






# பளையில் மோ.சைக்கிளை மோதித் தள்ளியது ரயில்!

## ஆண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலி

(ந.லோகதயாளன்)

பளையில் ரயிலுடன் மோதி ஆண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6:30 மணியளவில் கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில் 7.30 மணியளவில் பளைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதித் தள்ளியது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளைப் பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# இலங்கை மின்சார சபையின் தலைவர் திடீர் பதவி விலகல்!

இலங்கை மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாபிட்டிய பதவி விலகியுள்ளார்.

அவர் தனது இராஜினாமாகக் கடிதத்தை எரிசக்தி அமைச்சகத்திடம் சமர்ப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

திலக் சியம்பலாபிட்டிய, கடந்த வருடம் செப்டெம்பர் 26 ஆம் திகதி குறித்த பதவியைப் பொறுப்பேற்றி ருந்தார்.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கமைய குறிப்பிட்ட காலத்துக்குத் தலைவராகப் பணியாற்ற ஒப்புக்கொண்டதாகத் தெரிவித்துள்ள திலக் சியம்பலாபிட்டிய இலங்கை மின்சார சபையில் உள்ள திறமையான நிபுணர்கள் பணியைத் தொடர்வார்கள் என்றும் கூறியுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வேலை முடியவில்லை!

புதிய உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் ஜூன் 2 ஆம் திகதி தொடங்கும் என்று தேர்தல் ஆணையத் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்திருக்கின்றார். ஆக, 6 ஆம் திகதி தேர்தலில் தெரிவான சபைகள் உத்தியோகபூர்வமாக 2 ஆம் திகதிக்குப் பின்னர்தான் இயங்கத் தொடங்கும். அது வரையில் - இன்னும் மூன்று வாரங்கள் வரை - புதிய சபையின் தலைவர்கள் குறித்துத் தீர்மானிப்பதற்குக் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்குத் தாராளமாகக் கால அவகாசம் உள்ளது.

உள்ளாட்சி நிறுவனங்களில் பெரும்பான்மையாக வெற்றி பெற்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள், பிரதேச மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களின் விவரங்கள் உள்ளாட்சி நிறுவனங்கள் கூடுவதற்கு முன்பு வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டும் என்பதால், ஒரு வாரத்திற்குள் தங்கள் நிறுவனங்களின் மேயர், துணை மேயர், தலைவர் மற்றும் துணைத் தலைவர்களை அறிவிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அது மாத்திரமல்ல, பட்டியல் மூலம் தெரிவாகும் உறுப்பினர்களின் விவரங்களையும் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் அறிவிக்க வேண்டும். அப்போதுதான் சபைகள் கூடுவதற்கு முன்னர் அவற்றை தேர்தல் ஆணையம் வர்த்தமானியில் அறிவிக்க முடியும்.

கட்சிகளோ, சுயேச்சை குழுக்களோ தனித்து அறுதிப் பெரும்பான்மை பெற்ற சபைகளின் விடயங்களில் மட்டுமே தங்களுடைய மேயர், துணைமேயர் அல்லது நகர பிதா, துணை நகர பிதா அல்லது தவிசாளர், பிரதித் தவிசாளர் ஆகியோரின் பெயர் விவரங்களை சம்பந்தப்பட்ட கட்சியோ, சுயேச்சைக் குழுவோ அறிவிக்க வேண்டும். அறுதிப் பெரும்பான்மையை எந்தக் கட்சியோ அல்லது சுயேச்சை குழுவோ பெறாத சபைகளைப் பொறுத்தவரையில் - பெரும்பாலும் இரு நூறுக்கும் மேற்பட்ட சபைகளில் அதுதான் நிலைமை - தலைவர்கள், பிரதித் தலைவர்கள் தெரிவு சபையில் வாக்கெடுப்பு மூலம்தான் இடம் பெறும். அதன் பின்னர்தான் அவர்களின் விவரம் வர்த்தமானியில் வெளியாகும்.

இந்தத் தேர்தலில் நேரடியாக வட்டாரங்களிலும், மறைமுகமாக பட்டியல் மூலமும் களத்தில் நின்ற பல்லாயிரம் வேட்பாளர்களுக்கும் இன்னொரு முக்கியமான பொறுப்பும் கடப்பாடும் உள்ளது. அது 2023 ஆம் ஆண்டு தேர்தல் செலவின ஒழுங்குமுறை சட்டத்தின் மூன்றாம் பிரிவின்படி இந்தத் தேர்தலில் தங்களுக்கு ஏற்பட்ட பிரசாரச் செலவு விவரங்களை வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஆணையத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகளிடம் தங்கள் தகவல்களை வழங்க வேண்டும். தேர்தல் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் என்று தேர்தல் ஆணையக்குழு தலைவர் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார். இந்த அறிக்கைகளை உரிய காலத்தில் சம்ர்ப்பிக்காவிட்டால் சம்பந்தப்பட்ட வேட்பாளர்கள் - அவர்கள் பெயர்கள் வெறுமனே பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட - செலவினத்தைச் சமர்ப்பிக்கத் தவறிய குற்றத்துக்காக பலநெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். ஆகவே, வேட்பாளர்களைப் பொறுத்தவரை தேர்தல் பணி இன்னும் முடிவுறவில்லை.

# சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் போயா தினத்து ஒன்று கூடல் நாளை

(வடமராட்சி நிருபர்)

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் போயா தினக் கருத்துரையும் கலந்துரையாடலும் நாளை (12) திங்கட் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஆய்வு அலுவலர் வசந்தராஜ் "மக்களின் ஐக்கியமும் விழிப்புணர்வும் இன்றி பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு சாத்தியமா?" எனும் தொனிப் பொருளில் ஆய்வுக் கருத்துரை வழங்குவார்.

தேசியக் கலை இலக்கியப் பேரவையின் தலைமைப் பணிமனையின், 1134 (62), கே.கே.எஸ்.வீதி ,கொக்குவில் சந்தி கொக்குவிலில் அமைந்துள்ள கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறும் இந்த நிகழ்வின் தொடக்க உரையைத் தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் க.தணிகாசலம் வழங்குவார்.

கருத்துரை முடிவில் சபையோர் கலந்துரையாடல் இடம் பெறும். சமூக, விஞ்ஞான, அரசியல், கலை இலக்கிய ஆர்வலர்கள் அனை வருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



# மன்னார் பரப்புக் கடந்தான் கிராமத்தில் யானைகளால் தென்னைகள் அழிப்பு!

(மன்னார் எஸ் .ஆர்.லெம்பேட்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பரப்புக் கடந்தான் கிராமத்தில் நேற்று (10) இரவு புகுந்த யானைக் கூட்டம் பல தென்னை மரங்களை அழித்துள்ளது.

தொடர்ச்சியாக இந்தக் கிராமத்தில் பல பகுதிகளில் இவ்வாறாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்து காணப்படுகிறது என்றும் தாங்கள் வாழ்வாதாரமாக செய்து வரும் தோட்டங்களை அவை அழிக்கின்றன எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். அவ்வாறே இரவு யானைக் கூட்டம் பல தென்னை மரங்களை அழித் துள்ளன.

இவ்வாறான நிலை தொடர்ந்து ஏற்படுமாயின் இக்கிராமத்தில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் எனவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதனை கருத்தில் கொண்டு பரப்புக் கடந்தான் கிராமத்துக்கு ஒரு யானை வேலி அமைத்து தருமாறு மக்கள் அரசிடம் கோரிக்கை முன்வைக்கின்றனர்.



# சுழிபுரம் மூளாய் வதிரன்புலோ தேர்த் திருவிழா!





சுழிபுரம் மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெற்றது.

கடந்த முதலாம்திகதி வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மான இந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ஹட்டன் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் முத்தேர் திருவிழா!


(க.கிஷாந்தன்)

ஹட்டன் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் முத்தேர் பவனி மேளதாள இசை முழங்க நடைபெற்றது.

நுவரெலியா மாவட்டத்தின் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் இந்த முத்தேர் திருவிழா நடைபெற்றது.

தேர் பவனி ஆலயத்தில் நடைபெற்ற திரவிய அபிசேகம், வசந்த மண்டபப் பூஜை, உள் வீதி உலா வருதல் ஆகிய வற்றைத் தொடர்ந்து இடம்பெற்றது.

இந்தத் தேர் பவனி ஹட்டன் மல்லி யைப்பூ சந்திவரை சென்று மீண்டும் திரும்பி ஹட்டன் புறநகர் வழியாக எம். ஆர்.நகர்வரை சென்று பிரதான வீதி யூடாக ஆலயத்தை வந்தடைந்தது.







# மட்டு.வில் அன்னையர் தின நிகழ்வு!

(அபு அலா, த.ஜெபி ஜனார்த்)

அன்னையர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பாலர் பாடசாலை ஒன்றில் அன்னையர் தின நிகழ்வு இடம்பெற்றது.

முன்பள்ளியின் அதிபர் திருமதி திலினி குஷானத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு மட்டு. வலய கல்வி அலுவலக உதவி கல்விப் பணிப்பாளர் திருமதி அனுரேகா விவேகானந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பாலர் பாடசாலை பிள்ளைகளின் அன்னையர் தின கலை, கலாச்சார நிகழ்வுகளுடன், அன்னையர்களுக்கான வினோத உடை நடைபவனி போன்ற பல விளை யாட்டுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பாலர் பாடசாலை சிறுவர்களுக்கு பிரதம அதிதி பரிசில்களை வழங்கிக் கௌர வித்தார்.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பதில் தலைவராக றிபாஸ் நியமனம்!



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பதில் தலைவராக அட்டாளைச் சேனையைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடக வியலாளர் எம்.எப்.றிபாஸ் நியமிக்கப்பட் டுள்ளார்.

அமைப்பின் தலைவர் என்.எம் அமீன் வெளிநாட்டு பயணம் மேற்கொண்டதை அடுத்து உப தலைவராக இருந்த றிபாஸ் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அவனியில் அன்னை தெய்வமாய் தெரிகிறாள்...!

**(இன்று அன்னையர் தினம்)**



அம்மையே அப்பாவென் றழைத்தார் வாசகர்
அன்னையும் பிதாவும் என்றார் ஔவையார்
அன்னையைத் தொட்டே ஆரம்பம் என்பதை
அனைவரும் அகத்தில் இருத்திடல் வேண்டும்

அன்பின் உருவாய் அன்னையே இருக்கிறாள்
அவளே பொறுமையின் இருப்பிடம் ஆகிறாள்
உண்ண மறப்பாள் உறங்க மறப்பாள்
ஒரு கணமேனும் பிரியவே மறுப்பாள்

பத்து மாதம் பாடாய் படுவாள்
பசியும் பார்க்காள் ருசியும் பார்க்காள்
கருவை எண்ணியே உருகியே நிற்பாள்
காத்துக் கிடப்பாள் புதுமலர் கண்டிட

பட்ட வேதனைகள் பஞ்சாய்ப் பறந்திடும்
பச்சிளம் குழந்தை முகத்தைக் கண்டதும்
கட்டித் தழுவுவாள் கண்ணீர் பெருகும்
இட்டமாய் அணைப்பாள் இன்பத்தில் மூழ்குவாள்

அன்னையே என்று ஆனந்தப் படுவாள்
அனைத்தும் கிடைத்ததாய் அகநிறை வடைவாள்
பெண்மையே முழுமை பெற்றதாய் நினைப்பாள்
பெரு வரமாகவே எண்ணியே மகிழ்வாள்

நீள நினைப்பாள் நெஞ்சில் சுமப்பாள்
ஆழ அறிவை ஊட்டிட விளைவாள்
வாழ்வை வளமாய் ஆக்கிட முனைவாள்
வழித் துணையாக இருப்பாள் அன்னை

நல்ல குருவை நாடியே நிற்பாள்
வல்ல பிள்ளையாய் ஆக்கிட முனைவாள்
கற்றவர் முன்னே வந்திட வேண்டி
கைகூப்பிக் கடவுளை வேண்டியே நிற்பாள்

துன்பம் வந்தால் துடித்துப் போவாள்
அன்பைப் பொழிந்து அவளும் உருகுவாள்
சிரிப்பைக் கண்டால் சிறகை விரித்து
சிட்டுக் குருவியாய் வானில் பறப்பாள்

தாழ்ந்து விடாமல் தாங்கியே நிற்பாள்
வீழ்ந்து விடாமல் வேராய் இருப்பாள்
ஏணியாய் ஆகி ஏற்றியே விடுவாள்
என்றும் அன்னை துணையே ஆவாள்

அன்னை என்பள் ஆருயிர் போல்வாள்
அவளின் உணர்வே பிள்ளையே ஆகும்
அவனியில் அன்னை தெய்வமாய் தெரிகிறாள்
அவளைப் போற்றுவோம் அவழடி தொழுவோம்!



**மகாதேவஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.





# தீவகப்பகுதியில் சிறப்பு மருத்துவ முகாம்

(நடராஜா ஹரன்)

வட மாகாணத்தின் சிறப்பு பரிந்துரை மருத்துவ முகாம், யாழ். போதனா வைத்தியசாலையின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் பகுதிக்கு உட்பட்ட தீவு பகுதிகளில் மக்களின் சுகாதார நலன் பெறும் நோக்கில் நேற்று (10) சனிக்கிழமை அனலை தீவு வைத்தியசாலையில் இடம்பெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தியின் வழிநடத்தலில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் வழிகாட்டுதலில் வைத்தியர் சிவபாதமூர்த்தியின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்தச் சிறப்பு பல்துறை மருத்துவமுகாமில் வைத்தியசாலையின் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் பேரானந்தராஜா, அகஞ்சுரக்கும் தொகுதி வைத்திய நிபுணர் அரவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொது மருத்துவம், சத்திர சிகிச்சைக்கான ஆலோசனைகள், சிறுவர் நோய்கள், கண் சம்பந்தமான பிரச்சினைகள், தோல் சிகிச்சை, காது மூக்கு தொண்டை சிகிச்சை, மனநல சிகிச்சை, பற்சிகிச்சை, மற்றும் பாலியல் எச்ஐவி பரிசோதனைகள் ஆகியவை பிரிவு போன்றவற்றின் சிறப்பு மரும்துவ முகமாக இது அமைந்திருந்தது.

இந்த நிகழ்வில் மக்கள் கலந்து கொண்டு இலவச சிகிச்சை பெற்றுக் கொண்டனர். மேலதிக சிகிச்சைகள் தேவைப்படுவோருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கான அனுமதிச் சிட்டை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மிகவும் அவசியமான விடயமாகும்

## தமிழ் தேசியத்துக்காகப் பயணிப்போருக்கு அழைப்பு

### மே 12 தொடக்கம் 18 வரையில் அஞ்சலி

(வாலகிருஸ்ணா)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், தமது கைகளால் உறவுகளை வழங்கிய உறவுகளுக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது மிகவும் அவசியமான விடயமாகும். எதிர்வரும் மே 12 தொடக்கம் 18 வரையில் உயிர் நீர்த்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்த பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் தேசியத்துக்காகப் பயணிப்போர் உள்ளிட்ட அனைவரும் முன்வர வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த ஜனாதிபதி வரலாறு தெரியாத எங்கள் இளம் சமூகத்திடம் தன்னை நல்லவராக காட்டும் செயற்பாட்டையே முன்னெடுத்து வருகின்றார். வெளித்தோற்றத்தில் தன்னை நல்லவராகக் காட்டிக் கொண்டு சிங்கள அரசியலுக்குள் முழுமையாகச் சிக்கியுள்ளார்.

என்று மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி திருமதி அ.அமலநாயகி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஊடக சந்திப்பு நேற்று மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்றது. இதன் போது கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

16 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் எங்களுக்கு நடந்த இன அழிப்புக்கான எந்த நீதியும் கிடைக்கவில்லை. இலங்கை அரசின் இன அழிப்பு நாள் மே 18 அதை எம்மால் ஒருபோதும் மறந்து விட முடியாது. அதனை முன்னிட்டு எதிர்வரும் 12 திகதி தொடக்கம் 18 திகதிவரை இன அழிப்பு வாரத்தை முன்னெடுப்பதற்கு அனைத்துத்த தரப்பினரது ஒத்துழைப்பையும் வழங்குமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஒரு இனமே அழிக்கப்பட்ட நாள் மே 18. அதனை யாராலும் மறுக்கவும் முடியாது மன்னிக்கவும் முடியாது. இந்த இனஅழிப்பானது சர்வதேசத்தின் உதவியுடன் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டது.

16 வருடங்கள் கடந்தும் சர்வதேசமும் எம்மை மறந்திருப்பதை நீனைத்து நாம் வேதனையடைகின்றோம். எதிர்வரும் மே 12 ஆம் திகதியில் இருந்து வடகிழக்கில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் தேசிய பற்றாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அனைவரும் மே 18 ஆம் திகதி வரையில் இந்த இன அழிப்பு வாரத்துக்கு முழுமயான ஒத்துழைப்பை வழங்குமாறு கோரி நிற்கின்றோம்.




இறுதி யுத்தத்தின்போது பொருளாதார தடையை இலங்கை அரசு ஏற்படுத்தியிருந்தது. இதன்காரணமாக அப்பாவி மக்கள் சாப்பிட உணவு இல்லாமல், குடிக்க நீர் இல்லாமல். உப்பில்லா கஞ்சி அருந்தி உயிர்வாழ்ந்தவர்களும் அதுவும் கிடைக்காமல் பட்டினி சாவையும் இந்த மே 18 பேரழிவு நாள் ஏற்படுத்தியிருந்தது. அந்தவகையில் அந்த மக்களை ஞாபகப்படுத்தும் வகையில் மே 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையில் இன அழிப்பு வாரத்தில் இளைய சந்ததிக்கு இன அழிப்பு தொடர்பான விடயங்களை கொண்டுசெல்லும் வகையிலும் எமது உள்ளக் குமுறல்களைச் சர்வதேசம் வரையில் கொண்டு செல்லும் வகையிலும் உப்பில்லா கஞ்சியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இந்த இன அழிப்பு வார காலத்தில் களியாட்ட நிகழ்வுளை நிறுத்தி பல்லாயிரம் உயிர்கள் சிதைக்கப்பட்டு விதைக்கப்பட்ட இடமே முள்ளிவாய்க்கால் மண். அந்த இடத்தில் மே 18 ஆம் திகதி அனைத்து மக்களும் ஒன்று திரண்டு அங்கு பெரும் எழுச்சியை ஏற்படுத்தி சர்வதேசத்துக்கும் அனைவருக்கும் எடுத்துக்காட்ட அனைவரும் முன்வரவேண்டும்.

வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள்,தமது கைகளால் உறவுகளை வழங்கிய உறவுகளுக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது மிகவும் அவசியமான விடயமாகும். உயிர் நீர்த்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்த பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் தேசியத்துக்காகப் பயணிப்போர் உள்ளிட்ட அனைவரும் முன் வர வேண்டும்.

16 வருடங்களாக இந்த நாட்டில் ஒவ்வொரு அரசு உருவாக்கம் நடைபெறுகின்றபோதிலும் ஒவ்வொரு ஜனாதிபதியும் எங்களை ஏமாற்றியே சென்றார்கள். எங்களுக்கு இலங்கைக்குள் எந்த நீதியும் கிடைக்கப்போவதில்லை என்பதை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

எங்களுக்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் அலுவலகம் கூட ஒரு கண்துடைப்பு நாடகத்தையே அரங்கேற்றியிருக்கிறது.நாங்கள் காணாமல் போனவர்கள் பற்றி பல்வேறு தகவல்களை வழங்கியபோதிலும் அவர்கள் அது தொடர்பில் எந்த விசாரணையும் முன்னெடுக்கவில்லை.சர்வதேசத்திற்கு போடும் நாடகமே இதுவாகும்.

அநுர குமாரதிஷாநாயக்க தேர்தல் காலத்தில், காணாமல் ஆக்கியவர்களின் வலி தெரியும். தமது குடும்ப உறுப்பினர்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். தனது தாய்பட்ட வேதனையையும் உணர்வதாகவும் காணாமல் ஆக்கப்படுதல் என்பது மிகவும் கொடூரமானது என பிரசார காலத்தில் தெரிவித்திருந்தார்.

இதற்குத் தீர்வு பெற்றுத் தருவோம் என்றும் கூறியிருந்தார். ஆனால் ஆட்சிக்குவந்த பின்னர் அவரது செயற்பாடு மாறுபட்டதாகவே உள்ளது. அவரிடம் இருந்து நாங்கள் எந்த மாற்றத்தையும் உணரவில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினையைக் கையிலெடுப்பதற்கு அவர் தயாரில்லை.

அநுரகுமார திசாநாயக்க இங்கு ஒரு பிரச்சாரத்தை முன்னெடுப்பதுடன் சர்வதேசத்தில் வேறு ஒரு பிரசாரத்தை முன்னெடுக்கின்றார். 2017ஆம் ஆண்டுகாணாமல்ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலக சட்டம் வரும்போது சர்வதேச தலையீட்டுடன் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலகம் செயற்பட முடியும் என்று கூறியிருந்தார்கள். ஆனால் அதனை ஜே.வி.பி. தான் மறுத்து பிரசாரம் செய்தது. இவ்வாறான ஒருவர் ஒருபோதும் சர்வதேச விசாரணையை விரும்பமாட்டார்.உள்ளக விசாரணை என்ற ஒன்றின் கீழ் முடக்குவதற்கே செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

குற்றம் செய்தவர்களே இந்த நாட்டு அரசாங்கமாகும். குற்றம் செய்த அரசிடம் நாங்கள் எப்படி நீதி கோறுவது? சர்வதேசத்திடமே நாங்கள் நீதியை கேட்கலாம்.

இந்த அரசும் இராணுவக் கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு எங்களை கூட சுதந்திரமாக நடமாட முடியாமல் பல புலனாய்வாளர்களை விட்டு எம்மை பின்தொடர்கின்றனர். முன்னைய ஆட்சிக் காலத்தில் இருந்த அதே செயற்பாடுகள் இன்றும் இருந்துவருகின்றது. இந்த ஜனாதிபதி வரலாறு தெரியாத எங்கள் இளம் சமூகத்திடம் தன்னை நல்லவராக காட்டும் செயற்பாட்டினையே முன்னெடுத்து வருகின்றார். வெளித்தோற்றத்தில் தன்னை நல்லவராக காட்டிக்கொண்டு சிங்கள அரசியலுக்குள் முழுமையாக சிக்கியுள்ளார்.

இந்த இன அழிப்புக்குச் சர்வதேசமே தீர்வு தர வேண்டும் அதற்காகவே நாங்கள் 16 வருடங்களாக கண்ணீரோடு காத்திருக்கின்றோம்.– என்றார்.






# அம்ஷிகாவுக்கு நீதி வேண்டி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்!

(பழுவூரான்)

கொழும்பில் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு, உயிரிழந்த அம்ஷிகாவுக்கு நீதி கோரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு காந்திப்பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

"என் மௌனம் என் குற்றமல்ல. உன் செயல் தான் குற்றம் – மௌனத்தைக் கலைப்போம்" எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டோர் கறுப்புப் பட்டிய ணிந்து, மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது "பரிதாபம் வேண்டாம். பாதுகாப்பு வேண்டும்", "ஒன்றாய் எழுந்தால் சீண்டல் அழியும்", "தண்டனை இல்லை எனில் குற்றமும் தொடரும்", "தண்டனை இல்லை என்பதே குற்றவாளியின் தைரியம்","என் உடலை உன் உரிமையென எண்ணாதே', "அரசின் மௌனம் சீண்டலுக்கான அனுமதிப் பத்திரம்" போன்ற பதாதைகளை ஏந்தியும்,கோசங்களை எழுப்பியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபருக்குக் கையளிப்பதற்கான மகஜரும் வாசிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் சிவில் சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.






# மட்டு. புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தி. 150 ஆவது ஆண்டு நிறைவு நடைபவனி!

(பழுவூரான்)

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நடைபவனி இன்று (11) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் பாடசாலை முன்றலில் அமைக்கப்பட்டுள்ள சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலையை மட்டக்களப்பு கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ஹரிகரராஜ் திறந்து வைத்தார். அத்தோடு பாடசாலையின் பெயர்ப் பலகையை அயல் பாடசாலை அதிபர்கள் ஒன்றிணைந்து திறந்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமான நடைபவனி பிரதான வீதியூடாக ஆரையம்பதி மகா வித்தியாலயத்தைச் சென்றடைந்து அங்கிருந்து பிரதான வீதியூடாகக் கிரான் குளத்தைச் சென்றடைந்தது. பின்னர் அங்கிருந்து மீண்டும் பாடசாலையை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.குகதாசன், ஆலயத் தலைவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.





# இந்தியா - பாக். எல்லையில் மெல்ல திரும்பும் இயல்புநிலை

## கட்டுப்பாடுகள் நீக்கம்

இந்தியா – பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் நேற்று அறிவிக்கப்பட்டது. இருப்பினும் அடுத்த சில மணி நேரங்களில் பாகிஸ்தான் இந்திய எல்லையோர பகுதிகளில் தாக்குதல் நடத்தி அத்துமீறலில் ஈடுபட்டது.

இந்நிலையில், இன்று காலை முதல் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலத்தில் எந்தவித தாக்குதலும் நடைபெறவில்லை என்ற தகவல் களத்தில் இருந்து கிடைத்துள்ளது. இதனால் அங்கு இயல்பு நிலை திரும்பி வருகிறது.

போர் பதற்றத்தை அடுத்து முன்னெச்சரிக்கை கருதி இந்த மாநிலங்களில் அறிவிக்கப்பட்ட தடைகளும் தற்போது திரும்ப பெறப்பட்டுள்ளன. ராஜஸ்தான் மாநிலம் பார்மர் மாவட்டத்தில் மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பல்வேறு கட்டுப்பாடுகளை மாவட்ட நிர்வாகம் இன்று காலையில் திரும்ப பெற்றுள்ளது. இதை மாவட்ட நிர்வாக அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இன்று காலை முதல் ட்ரோன் தாக்குதல், குண்டு வீச்சு போன்ற எந்தவித தாக்குதலும் இந்தியா – பாகிஸ்தானின் சர்வதேச எல்லை மற்றும் எல்லை கட்டுப்பாட்டு கோட்டருகே உள்ள பகுதிகளில் இல்லை என தகவல் கிடைத்துள்ளது. இதை மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் பொலிஸ் தரப்பு உறுதி செய்துள்ளது.

இந்தியா – பாகிஸ்தான் இடையிலான போர் பதற்றம் காரணமாக கடந்த 4 நாள்களாக ட்ரோன் தாக்குதல், ஏவுகணை தாக்குதல், குண்டு வீச்சு போன்றவற்றை ஜம்மு காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்கள் எதிர்கொண்டன. பாகிஸ்தானின் வான்வழி தாக்குதல் முயற்சியை இந்திய பாதுகாப்பு படை வான் பாதுகாப்பு கவச அமைப்புகள் மூலம் இடைமறித்து அழித்தது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் இரவு நேரங்களில் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது. போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பிறகும் பாகிஸ்தான் அத்துமீறி தாக்குதல் மேற்கொண்டது. அதை சமாளிக்க நேற்று இரவும் இந்த பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமையான இன்று காலை முதலே எந்தவித தாக்குதலும் இந்திய எல்லையில் நடைபெறவில்லை என தகவல் கிடைத்துள்ளது. ஜம்மு காஷ்மீரின் குப்வாரா, பூஞ்ச், உதம்பூர், சம்பா, ரஜோரி, ஜம்மு, உரி, அக்னூர், ஸ்ரீநகர், பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ், பதன்கோட், பெரோஸ்பூர் மற்றும் ராஜஸ்தானின் ஜெய்சல்மாரில் இயல்பு நிலை திரும்பி வருகிறது. அதே நேரத்தில் பாதுகாப்பு படை எதிர் தரப்பின் நடவடிக்கையை கண்காணித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்தியன் பிரீமியர் லீக் தொடரை மீண்டும் ஆரம்பிக்க நடவழிக்கை







இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நேற்று மாலை அமுலுக்கு வந்த போர் நிறுத்த அறிவிப்பைத் தொடர்ந்து, இந்த மாதத்திலேயே மீண்டும் இந்தியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தொடங்கியுள்ளது.


புதிய சூழ்நிலையில் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அலுவலகப் பொறுப்பாளர்கள், அதிகாரிகள் மற்றும் இந்தியன் ப்ரீமியர்லீக்நிர்வாகக்குழுகூடி, இன்றைய தினம் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி, தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

போட்டியை விரைவில் மீண்டும் தொடங்குவதற்கான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளதால், பத்து அணி உரிமையாளர்களும் வெளிநாட்டு வீரர்களையும், பயிற்றுவிப்பாளர்களையும் இந்தியாவுக்குத் திரும்ப அழைக்க முயற்சிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இந்திய அரசாங்க அனுமதியைப் பெற்றால், எதிர்வரும் 15ஆம் திகதி போட்டிகள் மீள ஆரம்பிக்கப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லை தாண்டிய பதற்றங்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து, கடந்த 8 ஆம் திகதி அன்று தரம்சாலாவில் முதல் இன்னிங்ஸின் நடுவில் பஞ்சாப் கிங்ஸ் மற்றும் டெல்லி கேபிடல்ஸ் இடையேயான போட்டி கைவிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, போட்டிகளை ஒரு வாரம் நிறுத்தி வைக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கடந்த வெள்ளிக்கிழமையன்று முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்கா – சீனா இடையேயான பேச்சு சுவிட்சர்லாந்தில் ஆரம்பம்

உலகின் இரண்டு பாரிய பொருளாதார நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று சுவிட்சர்லாந்தில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதன் மூலம் அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு இடையேயான வர்த்தக யுத்தம் முடிவிற்கு வரக்கூடிய ஏதுநிலை ஏற்பட்டுள்ளதாகப் பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சீனாவிற்கு எதிராக பாரிய வரியினை பிரகடனப்படுத்தியிருந்தார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்குச் சீனா உடனடியாக பதில் நடவடிக்கையினை மேற்கொண்டது.

இதனால் இரு நாடுகளும் பரஸ்பரம் வரிகளை அதிகரித்ததால் பதட்டமான நிலை ஏற்பட்டது.

பல வாரங்களாகக் கடுமையான சொற்பிரயோகங்கள் ஏற்பட்டன.

இருப்பினும், நேற்று ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் நன்நம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அதேவேளை, அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு அமையவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளதாகச் சீன வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் ஏவுகணை வானிலேயே அழித்த இந்தியாவின் தற்கொலை படை ட்ரோன்கள்





இந்தியாவின் முக்கிய இடங்களை குறிவைத்து பாகிஸ்தான் செலுத்திய ஏவுகணைகளையும், வான் பாதுகாப்பு ராடர்களையும் வானிலே தாக்கி அழித்த தற்கொலை படை ட்ரோன்கள் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது. அந்த ட்ரோன்கள் பெங்களூரில் தயாரிக்கப்பட்ட “ஸ்கை ஸ்ட்ரைக்கர்ஸ்” ட்ரோன்கள் என தெரியவந்துள்ளது.

பாகிஸ்தான் வான் பாதுகாப்பு ராடர்களையும் தாக்கி அழித்ததில் ஆளில்லா தற்கொலை படை ட்ரோன்கள் ஈடுபடுத்தப்பட்டன. இது மட்டுமல்லாமல் பாகிஸ்தானில் உள்ள பஹாவல்பூர், முரிட்கே ஆகிய இடங்களில் செயல்பட்ட பயங்கரவாத முகாம்களையும் துல்லியமாக தாக்கி அழித்தன.

ஸ்கை ஸ்ட்ரைக்கர்ஸ் என்று அழைக்கப்படும் இந்த தற்கொலை படை ட்ரோன்கள் எதிரி நாட்டு ஏவுகணைகளை நடு வானிலே அழிப்பதுடன், எதிரி நாட்டின் இலக்குகளையும் துல்லியமாக தாக்கும் திறன் கொண்டவை. அதனால் இந்திய பாதுகாப்பு படை முதல் முறையாக, பயங்கரவாத முகாம்களை அழிக்கும் பணியில் இந்த ட்ரோன்களை பயன்படுத்தின.

ஸ்கை ஸ்ட்ரைக்கர்ஸ் என அழைக்கப்படும் ஆளில்லா தற்கொலை படை ட்ரோன்கள் பெங்களூருவில் உள்ள ஆல்ஃபா டிசைன் டெக்னாலஜிஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டவை. அந்த நிறுவனம் இஸ்ரேலின் எல்பிட் சிஸ்டம்ஸ் நிறுவனத்துடன் இணைந்து இதனை உருவாக்கியது.

இதன் சிறப்பம்சம் என்னவென்றால் போர்க்களத்தில் வானில் வட்டமிட்டு எதிரிகளின் இலக்குகளைக் கண்டறிந்து, அவற்றை வெடிபொருள்களால் அழிக்கும் திறன் கொண்டது.

ஒவ்வொரு ஸ்கை ஸ்ட்ரைக்கர் ட்ரோனும் 100 கிலோ மீற்றர் வரை பறக்கும் திறன் கொண்டது. 10 கிலோ வரை வெடிகுண்டுகளை கொண்டு செல்லக்கூடியது. அதன் மின்சார உந்துவிசை, குறைந்தபட்ச ஒலி தடத்தை கண்டறிந்து, குறைந்த உயரத்தில் கூட பயணித்து தாக்கக்கூடியது.

பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 11/05/2025

## கத்திக்குத்து தாக்குதலில் பெண் ஒருவர் படுகாயம்




மிசிசாகா நகரில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதல் 03



# இன அழிப்பு இடம்பெறவில்லையென கூறுபவர்களுக்கு கனடாவில் இடமில்லை

### கொழும்பிற்கு திரும்பிசெல்லுங்கள் என்கிறார் பிரம்டன் மேயர்

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு நடக்கவில்லை என கூறுபவர்களுக்கு கனடாவில் இடமில்லை எனவும் அவர்கள் கொழும்பிற்கு திரும்பிசெல்லுங்கள் என்றும் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

கனடா பிரம்டனில் தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது. 03

# மனிடோபா மாகாணத்தில் வெப்பநிலை அதிகரிப்பு

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை



கனடாவின் மனிடோபா மாகாணத்தில் வெப்பநிலை அதிகரிக்கப் போவதால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வின்னிப்பெக் உள்ளிட்ட தெற்கு மனிடோபாவின் பல பகுதிகளுக்காக வெப்ப அறிவிப்பு வெளியிட்டது.

கனடா சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற ஆணையம் 03





# தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபி கனடாவில் திறந்துவைக்கப்பட்டது

கனடா பிரம்டனில் தமிழர் இனவழிப்பு நினைவுத் தூபி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலையை நினைவுகூரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபியை திறந்துவைக்கும் நிகழ்வு சிங்காவுசி பூங்காவில் இடம்பெற்றவேளை கனடா அரசியல்வாதிகள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.






# கனடா வாழ் தமிழ் இளைஞர் தண்ணீரில் மூழ்கி உயிரிழப்பு







யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்டவரும் கனடாவில் வாழ்ந்து வருபவருமான இளைஞர் ஒருவர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்த துயர சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்தசம்பவத்தில் ஒன்டாரியோ ஸ்காபுரோ பகுதியை சேர்ந்த இளைஞனே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த இளைஞன் கனடாவில் பிறந்தவர் என்றும், அவரது பெற்றோர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி 19 வயது இளைஞன் நண்பர்களுடன் ஏரியில் குளிக்க சென்றுள்ளார். இதன்போது அவர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

**Bancroft** பகுதியில் ஏரியில் சடலம் ஒன்று மிதப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், மீட்பு குழுவினர் அந்தப் பகுதிக்கு சென்றுள்ளனர்.

இதன்போது படகில் இருந்த இருவர் பாதுகாப்பாக கரை சேர்ந்தனர் எனவும் ஒருவர் நீரில் விழுந்து மூழ்கி உயிரிழந்தனர் எனவும் அவசர உதவி குழுவினர் தெரிவித்தனர்.

நீருக்கடியில் தேடிய மீட்பு பிரிவினர் சடலம் ஒன்றை கண்டுபிடித்த நிலையில், அது படகில் சென்ற மூன்றாவது இளைஞன் என்பதை உறுதிப்படுத்தினர்.

அதேவேளை, சம்பவத்தின் போது உயிரிழந்த இளைஞன் உயிர்க்காப்பு அங்கி அணிந்திருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மனிடோபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

இந்த வாரம் ஞாயிறு முதல் செவ்வாய் கிழமை வரையில், பகல்நேர வெப்பநிலை 30°C முதல் 35°C வரையிலும், இரவு நேரம் குறைந்தபட்சம் 16°C அல்லது அதற்கு மேலாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள், வெப்பத்திலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெப்ப சோர்வு அறிகுறிகளில் தலைவலி, மயக்கம், வாந்தி, அதிக தாகம் மற்றும் உடல் சோர்வு ஆகியவை அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெப்பத்தில் பாதுகாப்பாக இருக்க, அதிகளவு தண்ணீர் குடிக்கவும், குளிரூட்டி அல்லது விசிறியை இயக்கவும் இலகுவான மற்றும் தளர்ந்த உடைகளை அணியவும் பரிந்துரைக்கப்படுகிறது.

வெளியே செய்ய வேண்டிய வேலைகளை அதிகம் வெப்பம் இல்லாத நேரங்களில் திட்டமிடவும், நேரடியாக சூரிய ஒளியைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வெப்பஅறிவிப்பின்போது வயதானவர்கள், குழந்தைகள் மற்றும் உடல்நலக்குறைவானவர்கள் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கத்திக்குத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவத்தில் பெண் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில், சிகிச்சை பெற்று வருகிறார் என்று பீல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை மாலை 6:30 மணியளவில், எக்லிங்டன் அவென்யூ வெஸ்ட் மற்றும் ஹுரொன்டாரியோ ஸ்ட்ரீட் சந்திப்பில் இந்த கத்திக்குத்து சம்பவம் நடந்துள்ளதாக அவசர சேவை குழுவுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும், மருத்துவ ஊழியர்களும், படுகாயமடைந்திருந்த பெண்ணை மீட்டுள்ளனர்.

அவரது நிலை மிகவும் மோசமாக இருப்பதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் நடக்கும் முன் இந்த பெண்ணும், ஒரு ஆணும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனர் என்று கூறப்படுகிறது.

அந்த ஆண் சந்தேகநபராகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அவர் தப்பிக் சென்றுள்ளார்.

சந்தேகநபரின் விவரங்கள் முழுமையாக கிடைக்கவில்லை. சுற்றுப்புற கண்காணிப்பு கேமராக்கள் வழியாக அவர் தொடர்பான தகவல்களை பொலிஸார் சேகரித்து வருகின்றனர்.

தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக பீல் பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## இன அழிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலையை நினைவு கூரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபியை திறந்துவைக்கும் நிகழ்வு சிங்காவுசி பூங்காவில் இடம்பெற்றவேளை கனடா அரசியல்வாதிகள் உட்பட பெருமளவானவர் திரண்டிருந்தனர்.

இனப்படுகொலைக்குள்ளானவர்களை நினைவுகூரும் வகையில் விளக்கேற்றப்பட்டதுடன் நினைவுத்தூபி திறப்பு விழா நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன் பின்னர் கனடாவின் அரசியல்வாதிகள் உட்பட பல நாடாவை வெட்டி நினைத்தூபியை திறந்துவைத்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண் நாங்கள் தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பை மறக்க கூடாது என்று தெரிவித்திருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை என தெரிவிப்பவர்களிற்கு பிரம்டனில் இடமில்லை கனடாவில் இடமில்லை கொழும்பிற்கு திரும்பிசெல்லுங்கள்.

ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கை அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்டார்கள், இலங்கை அரசாங்கம் தவறான தகவல்களை பரப்பிவருகின்றது. அவர்கள் உண்மைக்காகவும் நீதிக்காவும் குரல்கொடுத்த தமிழர்களை இழிவுபடுத்தவும், தாக்கவும் முயன்றனர், இது ஒரு உடல்ரீதியான இனப்படுகொலை மாத்திரமல்ல உலகின் அனைத்து பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் மீதான தாக்குதல்.

தமிழர் படுகொலை நினைவுதூபி என் நகரத்தில் உருவாகியுள்ளமை குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன். ஆனால் இன்னமும் செய்யவேண்டிய பணிகள் உள்ளன.” என்றார்.